மாலை முரசு

பக்கங்கள் 19

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 16 வெள்ளிக்கிழமை 03.11.2023 அதிர்வு 95




## லிட்ரோ எரிவாயு விலை அதிகரிப்பு

லிட்ரோ சமையல் எரி வாயு கொள்கலனின் விலையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் இந்த 04

# யாழில் நிர்மலாவுக்கு அமோக வரவேற்பு

### நல்லூர் கந்தனைத் தரிசித்த அவர்
### பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று யாழ்ப்பாணம் வந்தார். யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக சிறப்பு விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

நவம்பர் முதலாம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை 04



# தமிழர்களின் நலனில் இந்தியா முழு அக்கறை

## விரைந்து தீர்வு கிடைக்கக் கடும் அழுத்தம்
## வேண்டும் என்றும் சம்பந்தன் வலியுறுத்து



- சீ.ஏ. தமிழ்மாறன் -

“இலங்கையில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்களின் நலனில் இந்திய மத்திய அரசு முழுமையான அக்கறை செலுத்தியுள்ளது. உதவிகளையும் தொடர்ந்து வழங்கி வருகின்றது. இதனை நாம் வரவேற்கின்றோம். அதேபோல், இலங்கையில் தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு விரைந்து கிடைக்க நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசு, இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.” 04

## வடக்கில் வைத்தியர்கள் இன்று வேலைநிறுத்தம்

### யாழ். போதனா வைத்தியசாலை முன்பாகப் போராட்டம்




- எஸ். நிதர்ஷன் -

வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் இன்று காலை 8 மணி முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். 04

## மாபெரும் பலஸ்தீன் ஆதரவு கூட்டத்துக்கு 7இல் ஏற்பாடு

### மஹிந்த, சஜித், ஹக்கீம் பங்கேற்கிறார்கள்



- கே.ஏ. ஹமீட் -

கொழும்பு , ஹைட்பார்க் மைதானத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு 04



## பொலிஸ்மா அதிபருக்கு மீண்டும் சேவை நீடிப்பு

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு நான்காவது முறையாகவும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. 04



# யாழில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்ற இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்













(படங்கள்:- ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)





# யாழில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்ற இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்















(படங்கள்:- ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மாபெரும் பலஸ்தீன் ஆதரவு...

ஆரம்பமாகவுள்ள ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக உலக நாடுகளின் ஆதரவைக் கோரும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் சகல சமூகங்களையும் சேர்ந்த ஏனைய கட்சிகளுடனும், அமைப்புக்களுடனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்/ம் பங்கு பற்றி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அத்துடன், இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் அல்லலுறும் பலஸ்தீனர்களின் விமோசனத்துக்காக அணி திரளுமாறு நாட்டு மக்களுக்கு அவர் வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.

இதனை ஏற்பாடு செய்து வரும் “வீ ஆர் வன்” என்ற அமைப்பின் தலைவர் சுரேன் சந்திரவுடன், உலமாக்கள் உட்பட கட்சியின் “தாருஸ் ஸலாம்”தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை தம்மைச் சந்தித்து கலந்துரையாடியவர்களிடம் அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், ஏனைய பல கட்சிகளின் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் இதில் பங்கெடுக்க இருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது. முக்கியமாக பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க கிறிஸ்தவ சமயங்களைச் சேர்ந்த மதப் பெரியார்கள் பலரும் இதற்கு ஒத்துழைக்க இணக்கியுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட மு.கா. தலைவர் ஹக்கீம், அவரது வருகையை உறுதிப்படுத்தினார். அத்துடன், அது பற்றிய குறுந்தகவலொன்றையும் சஜித் உடனடியாகவே ஹக்கீமுக்கு இட்டிருந்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பு மத்திய குழுவின் தலைவர் அர்ஷாத் நிசாம்தீனுடன் அதன் உறுப்பினர்களும் அங்கு பிரசன்னமாகியிருந்ததோடு, இதற்கு ஒத்துழைப்பது பற்றிய பயனுள்ள கருத்துக்களையும் தலைவருடனும், வந்தவர்களுடனும் அவர்கள் பகிர்ந்துகொண்டனர்.

## யாழில் நிர்மலாவுக்கு...

மேற்கொண்டார். இந்நிலையில், அவர் இன்று யாழ்ப்பாணம் வந்தார்.

முற்பகல் 10.15 மணியளவில் இந்திய நிதி உதவியில் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தைப் பார்வையிட்ட அவர், பாடசாலை மாணவர்களின் கண்டுபிடிப்புக்கள் அடங்கிய கண்காட்சியையும் பார்வையிட்டார். மேலும் கலாசார மண்ட சரஸ்வதி அரங்கில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்விலும் அவர் கலந்து கொண்டார்.

இதன்போது இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, இந்தியத் துணைத் தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், இலங்கை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தைப் பார்வையிட்ட அவர், அங்குள்ள சரஸ்வதி, வள்ளுவர் சிலைகளுக்கும் மாலையிட்டு மரியாதை செலுத்தினார்.

பின்னர் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் இந்திய நிதி உதவியில் அமைக்கப்பட்ட இந்தியன் கோனரையும் அவர் பார்வையிட்டார். அங்குள்ள முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் சிலைக்கும் அவர் மாலையிட்டு மரியாதை செலுத்தினார்.

முற்பகல் 11.15 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் அவர் கலந்து கொண்டார்.

இதன்போது அங்கு கூடியிருந்தவர்களிடம் நல்லூர் கந்தசுவாமி கோயில் பூசகரின் பெயர் என்ன என்று கேள்வி எழுப்பினார். அங்கிருந்தவர்கள் வைகுந்த குருக்கள், பிரசன்னா குருக்கள் என்றனர்.

அதன் பின்னர் பிரசன்னா குருக்கள் உலகளவில் தற்போது ஹீரோ என இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். ஆலய மஹோற்சவத்தின் போது கட்டியம் கூறுவதையும் புகழ்ந்து பாராட்டினார்.

பிற்பகல் 12.20 மணியளவில் யாழ்ப்பாணத்தில் பாரத ஸ்டேட் வங்கிக் கிளையையும் (இந்தியாவின் மிகப் பெரும் அரச வங்கிக் கிளை) இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் திறந்துவைத்தார்.

**(யாழில் நிர்மலா சீதாராமன் பங்கேற்ற நிகழ்வுகளின் படங்கள் 2, 3, 5ஆம் பக்கங்களில்)**

## தமிழர்களின் நலனில்...

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் வலியுறுத்தினார்.

‘மலையகம் – 200’ நிகழ்வில் பங்கேற்க கொழும்பு வந்த இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், வடக்கு – கிழக்குக்கும் வந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றுள்ள நிலையிலேயே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசியல் தீர்வு விவகாரத்தில் ராஜபக்ஷ அரசு போல் ரணில் அரசும் வாக்குறுதிகளை மாத்திரம் வழங்குகின்றது. ஆனால், செயல் வடிவில் எந்த முன்னேற்றமும் இல்லை. இந்த விவகாரத்தில் இந்திய மத்திய அரசு அதீத கவனம் செலுத்த வேண்டும்.

தமிழர்களின் கோரிக்கைகள் என்ன, அவர்கள் விரும்பம் தீர்வு என்ன ஆகிய விடயங்களை இந்தியாவின் மோடி அரசிடம் நாம் ஏற்கனவே எடுத்துரைத்து விட்டோம். எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் மோடி அரசு, இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.” – என்றார்.

## லிட்ரோ எரிவாயு...

அறிவித்தலை இன்று விடுத்துள்ளார்.

இதற்கமைய, 12.5 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு கொள்கலனின் விலையை 70 – 90 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விலை அதிகரிப்பு நாளை முதல் அமுலாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிஸ்மா அதிபருக்கு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மீண்டும் இந்தச் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் வைத்தியர்கள்...

இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நாளை காலை 8 மணி வரை முன்னெடுக்கப்படும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் இடம்பெற மாட்டாது. மகப்பேற்று மருத்துவ சேவைகள், சிறுவர் மருத்துவ சேவைகள், புற்றுநோய் சிகிச்சைகள், சிறுநீரக செயலிழப்புக்கான சிகிச்சைகள் மாத்திரம் இடம்பெறும்.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்பாக இன்று காலை ஒன்றுகூடிய வைத்தியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

“திறமையற்ற சுகாதார நிர்வாகிகளே வைத்தியர்களின் தொழில் உரிமைகளில் கை வைக்காதே”, “முறையற்ற வரி, சம்பள வெட்டு மூலம் வைத்தியர்களைத் துரத்தாதே”, “அடிப்படை மருந்து உபகரணங்களை உறுதிப்படுத்து” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை வைத்தியர்கள் தாங்கியிருந்தனர்.











# யாழில் பாரத ஸ்டேட் வங்கிக் கிளையை திறந்து வைத்தார் நிர்மலா சீதாராமன்!

யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தந்தை இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், இந்தியாவின் மிகப் பெரும் அரச வங்கியான பாரத ஸ்டேட் வங்கியின் கிளையைத் திறந்து வைத்தார்.

**(படங்கள்:- ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)**




# பேராதனை பல்கலைக்கழக மாணவருக்கு ‘ட்ரோன்’ தொழில்நுட்ப பிரயோகப் பயிற்சி

**(எம்.எம்.றம்ஸீன்)**

பேராதனை பல்கலைக்கழக புவியியற்துறை மாணவர்களுக்கு தென் கிழக்கு பல்கலைக் கழகத்தால் கரையோர ஆய்வுகளில் புவிவெளியுருவவியலில் ‘ட்ரோன்’ தொழில்நுட்ப பிரயோகம் தொடர்பாகக் களப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் விரிவுரையாளர் கே.நிஜாமிர் தலைமையில், பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல் ஒருங்கிணைப்பில் இது நடைபெற்றது.



தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரபீக்கா அமீர்தீன் ஆரம்ப உரையாற்றினார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எஸ்.எம்.ராசிக் கலந்துரையாடலின் நோக்கம் பற்றி மாணவர்களுக்கு விளக்கினார்.

பேராசிரியர் முதிக சுமனஜித் பெரேரா மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் சாந்த ஜெயகுமார, பேராதனை பல்கலைக்கழக புவியியற்துறை இறுதி வருட விஷேட மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தமிழ் மொழிதின போட்டியில் மட்டக்களப்புக்கும் பெருமை!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

தேசிய மட்ட தமிழ் மொழிதின போட்டியில் முதலிடம் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்த களுவாஞ்சிகுடி பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய மாணவி டிலக்சனாவுக்கு பலத்த வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.



தேசிய மட்ட தமிழ் மொழி தின போட்டிகளில் கட்டுரை வரைதலும் நயந்த பகுதியும் போட்டியில் முதலிடம் பெற்ற தரம் 13 கலைப் பிரிவு மாணவி புண்ணியமூர்த்தி டிலக்சனாவை பாடசாலை அதிபர் உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் பாராட்டிக் கௌரவித்துள்ளனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## யாழ் எம்.பியின் பதில் என்ன?

தமிழர் காதில் பூச்சுற்றுவதும், சிறுபான்மையினரைப் பாகுபாடு காட்டி ஓரம் கட்டுவதும்தான் தென்னிலங்கைப் பேரினவாதத்தின் பாரம்பரிய பரவணிப் பண்பியல்பு. அதற்கு நம்மவர்கள் சிலர் துணை போவது மிக அவமானகரமான விடயம்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் தாண்டாதவர்கள் ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு என்று அறிவித்தார். ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் தலா முப்பது பேருக்கு வேலைவாய்ப்பு என்றார்கள். விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அத்திட்டத்தின்படி வடக்கில் சுமார் 9 ஆயிரம் பேருக்கு வேலை வழங்கப்பட வேண்டும். விண்ணப்பங்களின்படி ஆள்கள் தெரிவும் நடந்தது. அதற்கிடையில் பொதுத்தேர்தல் வர, நியமனங்கள் வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது. அப்போது மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவராக இருந்த அங்கஜன் இராமநாதன் ஓர் ஆளணி அமைத்து, அந்த ஒவ்வொரு விண்ணப்பதாரியுடனும் அவர்களது குடும்பத்தினருடனும் தொடர்பு கொண்டு, அந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் தான் வென்றால் மட்டுமே தேர்தலின் பின்னர் அவர்களுக்கு நியமனம் கிடைக்கும் என்று ஒரு போடு போட்டார். அதன் மூலம் யாழ் மாவட்டத்தில் 49 ஆயிரம் வாக்குகளைச் சுருட்டினார்.

பொதுத்தேர்தல் முடிந்தது. தென்னிலங்கை தனது கைவரிசையைக் காட்டியது. வடக்கு, கிழக்குக்கு மட்டும் அந்த நியமனங்கள் நிறுத்தப்பட்டன. மற்றைய மாகாணங்களில் நியமனங்கள் வழங்கப்பட்டன. அந்த நியமனங்களைக் காட்டி வாக்குச்சுருட்டி எம்.பியான அங்கஜனும் பம்மிக் கொண்டு அமுக்கி வாசிக்கிறார். நியமனங்களை நம்பி, எதிர்பார்த்து, அவருக்கு வாக்களித்தோர் கடுஞ் சீற்றத்தில் இருக்கின்றனர்.

இப்போது வடக்குக் கிழக்குக்கு வெளியே அந்த நியமனங்கள் பெற்றவர்களை, வடக்கில் உள்ள ஆளணியை நிரப்ப அங்கிருந்து இங்கு அனுப்புகின்றார்கள். அதுவும் சிங்களவர்களை வடக்கே அனுப்புகின்றனர். வடக்கில் நியமனங்களைத் தடுத்து நிறுத்தி விட்டு, பிற இடங்களில் உள்ளவர்களுக்கு நியமனங்களை வழங்கி, அந்த வடக்கு ஆளணி இடங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நியமன விவகாரத்தை வைத்து வாக்குச் சுருட்டி, அதன் மூலம் எம்.பியானவர், பார்த்து வாளாவிருக்கிறார்.

இப்படிச் சிங்களவர்களை இங்கே அனுப்புவதைத் தடுத்து நிறுத்துவேன், நியமிக்கப்பட்டோரைத் திருப்பி அனுப்புவேன் என்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. ஆனால், பார்த்தால் அவரது அமைச்சின் வடக்கு அலுவலகங்களுக்கே அப்படி இந்தத் திட்டத்தின் கீழ் தென்னிலங்கையில் இருந்து நியமிக்கப்படும் சிங்களவர்களை நியமித்து அனுப்பி இருக்கிறார்கள்.

இங்கு, மாகாண மற்றும் மாவட்ட ரீதியில் உள்ளூரில் ஆளுநர், அரச அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள் நியமனம் வழங்கக்கூடிய பதவிகளுக்கு கூட, இப்படி தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவம் மூலம் தலையிட்டு, அவற்றைப் பிடுங்கி, தென்னிலங்கையே நேரடியாகத் தானே தன் ஆள்களுக்கு வழங்கும் திருகுதாளம் தொடர்கின்றது.

தமிழர் தலையில் மிளகாய் அரைத்து தம்மை எம்.பியாக்கிக் கொண்டவர் என்ன நியாயம் கூறப்போகிறார்?

## மலையகத் தமிழ் மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம்

### பா.ஜ.க. தமிழகத் தலைவர் அண்ணாமலை தெரிவிப்பு

“இலங்கையில் வாழும் மலையக மக்களுக்கும் இந்தியாவில் வாழும் மலையக மக்களுக்கும் பாரதிய ஜனதாக் கட்சி என்றும் ஆதரவாக இருக்கும். அவர்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்போம்.”

– இவ்வாறு பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

கொழும்பு சுகததாஸ அரங்கில நேற்று மாலை நடைபெற்ற ‘நாம் 200’ தேசிய நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

‘நாம் 200’ என்பது கடுமையான பாதைகளை நினைவுபடுத்துகிறது. பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த மலையக மூதாதையர்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை உருவாக்கி நாட்டை வளப்படுத்தினார்கள்.

கடின உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை மற்றும் போராட்டம் ஆகியவற்றை மூலதனமாக கொண்டு மலையக மக்கள் இந்த 200 ஆண்டுகாலத்தை நிறைவு செய்துள்ளார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பல துயரங்களை அனுபவித்த மக்கள் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்டதன் பின்னரும் அரசியல் ரீதியில் பிரித்தாளப்பட்டார்கள்.

சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தினால் சுமார் 3 இலட்சம் மலையக தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களில் குடியேறி புதிய வாழ்க்கையை வாழ ஆரம்பித்தார்கள்.

இந்த 200 ஆண்டு காலத்தில் உலகில் வேறெந்தவொரு இனமும் இவ்வாறானதொரு நிலையை எதிர்கொள்ளவில்லை. தனி வீடு வேண்டும் என்பது பெருந்தோட்ட மக்களின் பிரதான கோரிக்கையாக உள்ளது. இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் மலையகத்தில் இந்திய வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வெகு விரைவில் இந்த திட்டம் நிறைவுபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறோம். பெருந்தோட்ட மக்களுக்கு சொந்த வீட்டுடன் காணி உறுதிப்பத்திரம் வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் உறுதியளித்துள்ளதை வரவேற்கிறோம்.

2017ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி நுவரெலியா மாவட்டத்துக்குச் சென்று அங்கு வாழும் மலையக மக்களை சந்தித்து உரையாடினார்.

பெருந்தோட்ட மக்களின் உழைப்பு மற்றும் விடாமுயற்சியை பிரதமர் நரேந்திர மோடி வியந்து பார்த்து அதனை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக கொண்டார்.

இலங்கையில் உள்ள மலையக மக்களுக்கும் இந்தியாவில் வாழும் மலையக மக்களுக்கும் பாரதிய ஜனதா கட்சி ஆதரவாக இருக்கும். அவர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம். – என்றார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

“தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பாரியளவில் வளர்ச்சியடையும்.”

-கிரேக்கப் பழமொழி



# யாழ். நகரில் மோட்டார் சைக்கிள் திருடியவர் பொலிஸாரால் கைது!

(எஸ். நிதர்ஷன்)

யாழ். நகரில் வீதியில் தரித்து நின்ற மோட்டார் சைக்கிளை திருடியவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் வெவ்வேறாக் கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

யாழப்பாணம் செல்வா திரையரங்கு முன்பகுதியில் கடந்த 29 ஆம் திகதி நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் திருட்டுப் போயிருந்தது.

இந்த நிலையில் திருட்டுத் தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்ற விசாரணை பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி கேவா வசந்தலமையிலான குழுவினர் கிளிநொச்சி பூநகரியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேக நபரை கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கோண்டு வருகின்றனர்.

# கிராம அலுவலர்கள் ஆள்சேர்ப்பு மூன்று மாதங்களில் நியமனங்கள்!

## 3 ஆயிரம் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்கிறார் பிரதமர்

கிராம உத்தியோகத்தர்களை ஆள் சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சை டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்பட்டு மூன்று மாதங்களுக்குள் நியமனங்கள் பூர்த்தி செய்யப்படும் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சுமார் 3000 கிராம அலுவலர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று பிரதமர் தெரிவித்தார்.

சட்டரீதியாக அனைத்து விண்ணப் பதாரர்களுக்கும் தேர்வில் பங்கேற்க



வாய்ப்பு வழங்கப்படும் என்றும் பிரதமர் கூறினார்.

வவுனியா மாவட்ட உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் வவுனியா மாவட்ட செயலகத்தில் “புதிய கிராமம் புதிய நாடு” தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் உள்ள தொலை தூர பிரதேசங்களில் விசேட தகைமையின் அடிப்படையில் பரீட்சையை நடத்திய பின்னர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்று பிரதமர் மேலும் தெரிவித்தார்.



# உடல் பாகங்கள் சிதைந்த நிலையில் இராகலையில் இளைஞன் சடலம் மீட்பு!

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹரஸ்பெத்த பகுதியில் தர்பனா எல மலை அடிவாரத்தில் உடல் பாகங்கள் சிதைந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தை நேற்று (02) மாலை மீட்டுள்ளனர் என்று இராகலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் இராகலை ஹரஸ்பெத்த பகுதியில் வசித்த மலிந்த தில்ஷான் (வயது 24) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் இராகலை பொலிஸார் கூறினர்.

சடலமாக மீட்கப்பட்ட மலிங்க தில்ஷான் தனது வீட்டில் தாய், தந்தையரை தாக்கி சண்டையிட்டுவிட்டு, 'நான் எங்காவது போய் எனது உயிரை மாய்த்துக் கொள்வேன் எனது உடம்பு கூட உங்களுக்கு கிடைக்காது' என்று கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியேரியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த இளைஞனின் பெற்றோர் இராகலை பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறையிட்டிருந்தனர். தமது மகன் மது அருந்திவிட்டுத் தங்களைத் தாக்கிவிட்டுக் கோபத்தில் வீட்டைவிட்டு சென்றுள்ளார்' என்று முறைப்பாடு செய்திருந்தனர்.

அதேநேரத்தில் கோபத்தில் சென்ற மகன் வீட்டுக்கு வந்துவிடுவான் என்ற நம்பிக்கையில் இருந்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று (02) மாலை இளைஞரின் வீட்டாருக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ள.

அந்த அழைப்பில், அடையாளம் தெரியாத நபரின் சடலம் ஒன்று தர்பனா எல மலை அடிவாரத்தில் கிடப்பதாக தெரிவித்துள்ளார். இதையடுத்து இத்தகவலை பெற்றோர் இராகலை பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர்.

அங்கு விரைந்த இராகலை பொலிஸார் அங்கு உடல் பாகங்கள் சிதைந்து உயிரிழந்த நிலையில் இளைஞரின் சடலத்தை மீட்டுள்ளனர்.

அதேநேரத்தில் உயிரிழந்திருப்பது தமது மகன் என்று பெற்றோரும் சடலத்தை அடையாளம் காட்டியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வலப்பனை நீதிவான் நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ள பொலிஸார் இது கொலையா தற்கொலையா என்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வங்கி வாகனத் தரிப்பிடத்தில் விழுந்து கிடந்த 50 லட்சம் ரூபா!

## வங்கி அதிகாரியிடம் ஒப்படைப்பு

மாத்தறை இலங்கை வங்கி உயர்தரக் கிளையின் வாகன தரிப்பிடத்துக்கு அருகில் தரையில் விழுந்து கிடந்த 50 லட்சம் ரூபாவை மாத்தறை நகரிலுள்ள கூரியர் சேவை நிறுவனம் ஒன்றின் உதவி முகாமையாளர் வங்கியில் ஒப்படைத்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (02) இடம்பெற்றுள்ளது.

அஹங்கம பகுதியைச் சேர்ந்த சந்தன உதயங்க (38) என்பவரே இவ்வாறு பணத்தை ஒப்படைத்துள்ளார்.



வங்கி ஊழியர்கள் ஏ.டி.எம்களுக்கு எடுத்துச் சென்ற அல்லது மத்திய வங்கியில் வைப்புச் செய்ய எடுத்துச் சென்ற 50 லட்சம் பணம் தரையில் விழுந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

குவியல் குவியலாக தரையில் விழுந்த 50 லட்சம் ரூபா நோட்டுகளை போட்டோ எடுத்து, பின்னர் இதுபற்றி பாதுகாப்பு அதிகாரிக்குத் தெரிவித்து வங்கி அதிகாரியை அழைத்து அவர்களிடம் அந்தப் பணத்தை ஒப்படைத்துள்ளார்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் மாணவி ஒருவர் உயிரிழப்பு!

மாவத்தகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் 16 வயது மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று (02) மாலை மாவத்தகம, 09 ஆம் கம்பம் கெம்பிலிதியெத்த புராதன விகாரைக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் வீதியில் சறுக்கி எதிர்திசையில் வந்த பேருந்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த சாரதியும் பின்னால் அமர்ந்து சென்ற மகளும் மாவத்தகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் 16 வயதுடைய மகள் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மாணவி கஹபத்வல பிரதேசத்தை சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கண்டி குண்டசாலையில் மரம் வீழ்ந்ததில் காயமடைந்தவர்களில் ஒருவர் உயிரிழப்பு!

சீரற்ற காலநிலை காரணமாக மரம் முறிந்து விழுந்ததில் காயமடைந்திருந்த மூவரில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த மேலும் இருவர் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி மஹியங்கனை வீதியில் பல்லேகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குண்டசாலை பகுதியில் நேற்று (02) மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பழக்கடையின் உரிமையாளரும் அவருக்கு உதவியாக இருந்த பெண் ஒருவரும் காயமடைந்துள்ளனர். கடைக்கு வந்திருந்த வாடிக்கையாளர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் வராபிட்டிய குண்டசாலை பிரதேசத்தில் வசிக்கும் 56 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரம் விழுந்ததில் கண்டி மஹியங்கனை வீதியில் பயணித்த வான் ஒன்றும் சேதமடைந்துள்ள. வானில் இருந்த எவருக்கும் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# அறநெறி மாணவர்களின் சுற்றுலாவுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் ரூ. 75 ஆயிரம் நிதி!

சந்நிதியான் ஆச்சிரமம் கற்பகா அறநெறி மாணவர்களுக்கு ஆன்மீக சுற்றுலாவுக்கு 75 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு - நெடுங்கேணி, மாமடுச் சந்தி கற்பகா அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஆன்மீகச் சுற்றுலாவாக, யாழ்ப்பாணப் பகுதிகளில் தொண்மைமிகு ஆலயங்கள், சுற்றுலா மையங்கள் என்பனவற்றைப் பார்வையிட்டனர். இதற்கே இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.



# பிரதான வீதியின் ஒரு பகுதி கினிகத்ஹேனவில் தாழிறக்கம்!



கனமழை காரணமாக பிரதான வீதி ஒன்றின் ஒரு பகுதி தரை திடீரெனத் தாழிறங்கியுள்ளது.

கினிகத்ஹேன பிரதேசத்தில் கடந்த சில நாடள்களாகப் பெய்துவரும் கடும் மழையால் ஹட்டன் - கொழும்பு ஏ-07 பிரதான வீதியின் ஒரு பகுதியே இவ்வாறு தாழிறங்கியுள்ளது.

இதன் காரணமாகக் குறித்த இடத்தில் போக்குவரத்து ஒரு பகுதிக்கு மட்டுப்படுத் தப்பட்டுள்ளது என்று கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் கினிகத்ஹேன கோவிலை அண்மித்த பிரதான வீதியின் ஒரு பகுதியே இவ்வாறு தாழிறங்கியுள்ளது.

இன்று (03) காலை 08 மணியளவில் இந்த தாழிறங்கல் இடம்பெற்றது. இதற்கு முன்னரும் இதே இடத்தில் தாழிறக்கம் ஏற்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

வீதியில் வாகனங்களை செலுத்தும் போது அவதானத்துடன் இருக்குமாறு சாரதிகளைப் பொலிஸார் கேட்டுள்ளனர்.



# கிரான் மத்திய கல்லூரியில் புதிதாக மூன்று கழகங்கள்

(மு.கோகிலதாசன் )

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்துக்கு உட்பட்ட கிரான் மத்திய கல்லூரியில் மாணவர்களின் ஆளுமையை விடுத்திக்காக மூன்று கழகங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

கிரான் மத்திய கல்லூரியுடன் கிரான் பழைய மாணவர் அமைப்பு இணைந்து நடைமுறைப்படுத்தும் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கான விசேட செயற்றிட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 24 கழகங்களில் முதல் மூன்று கழகங்களான மாணவர் மென்திறன் கழகம், இளம் கண்டுபிடிப்பாளர் கழகம், ஊடக கழகம் என்பான அங்குரார்ப்பணம் செய்ப்பட்டுள்ளன.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் உத்தியோக பூர்வமாக இவற்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

கிரான் மத்திய கல்லூரியின் அதிபர் மா. தவராஜா தலைமையில் இடம்பெற்ற



இந்த நிகழ்வில் கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு, கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி க.அருளானந்தம், கல்குடா பிரதி கல்விப்பணிப்பாளர் கே.ஜெயவதனன் மாற்றும் கிரான் உட்ட பாடசாலைகளின் அதிபர்கள், சிவஸ்ரீ மு.சண்முகம், கிரான் மெதடிஸ்த திருச்சபையின் குரு அருட்திரு வே.உதயகுமார் கிரான் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும், கல்லூரியின் இணைப் பாசிரியர்கள், பழைய மாணவர் அமைப்பின் நிர்வாக சபை உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ஆக்கத்திறனில் தேசிய ரீதியில் முதலிடம்

தமிழ் ஆக்கத்திறன் வெளிப்பாட்டுப் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் தேசிய ரீதியில் முதலாம் இடம் பெற்றுள்ளார்.

பாலசந்திரன் கீர்த்தனன் என்னும் மாணவன் தமிழ் கீழ்ப் பிரிவில் ஆக்கத்திறன் வெளிப்பாட்டுப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றுக் கல்லூரிக்கும் மாகாணத் துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.






# வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவுக் கண்காட்சி!

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுக் கல்வி கண்காட்சி நேற்று வட்டுகோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்றது.

மாணவர்களின் பாடத்திட்டத்துக்கு அமைவாக அனைத்து பாடத் திட்டங்களையும் பிரதிநிதித்துவபடுத்திக் கண்காட்சி முன்னெடுக்கப்பட்டது.

வட்டுகோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சாரணர் குழுவால் கல்லூரியின் சாரணிய நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு 2016 ஆம் ஆண்டு வெளியான தடைதகர் குறுந்திரைப் படமும் இதன்போது வெளியிடப்பட்டது.

பாடாசாலை அதிபர், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் அயல் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.














# கல்முனை கல்வி வலயத்தில் மாணவ நாடாளுமன்ற மாநாடு!

**(யூ.கே. காலித்தீன், நூருல் ஹுதா உமர் )**

கல்முனை கல்வி வலய பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாநாடு அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் அனுசரணையுடன் கல்முனை வலயக் கல்வி அலுவலக ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (01) சாய்ந்தமருது லீ மெரீடியன் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

நாட்டின் ஜனநாயகம், நல்லாட்சி, நாடாளுமன்ற நடைமுறைகள், நாடாளுமன்ற சட்டவாக்கம், தலைமைத்துவம் தொடர்பில் இது இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமரின் ஆரம்ப உரையுடன் நிகழ்வு ஆரம்பமானது.

கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்வி பணிப்பாளர் எம்.எச். ஜாபீர் தலைமையுரை நிகழ்த்தினார்.

பிரதான வளவாளராக இலங்கையின் முதலாவது முஸ்லிம் அரசியல்துறை பேராசிரியரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடாதிபதியுமான பேராசிரியர் எம்.எம். பாஸில் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரும், உள்ளூராட்சி மாகாண சபைகள் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இறுதியாக மாணவ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிதிகளால் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.




# சாதனைப் பேராசிரியர் சுரேஸ் கனகராஜா!

ஸ்ரன்போட் பல்கலைக்கழக அறிவிப்பில், மொழியியலாளர் வரிசையில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் ஆங்கில மொழி கற்பித்தல் மையத் தலைவரும், அமெரிக்காவிலுள்ள பென்சில்வானியா அரச பல்கலைக்கழகத்தின் பிரயோக மொழியியல், ஆங்கிலம், மற்றும் ஆசிய கற்கைகளுக்கான எட்வின் ஏர்ழ் ஸ்பார்க்ஸ் பேராசிரியர் சுரேஷ் கனகராஜா ஆய்வாளர்களின் முதல் 2 வீதத்திலும் அத்துடன் மீண்டும் ஒரு முறை உலகத்தின் முதல் பத்து மொழியியல் பேராசிரியர் வரிசையில் ஒருவராகவும் இடம்பெற்றுள்ளார்.

அவரது பெயர், புகழ் பூத்த மொழியியலாளர் நோம் சொம்ஸ்கி (Noam Chomsky) யின் பெயருக்கு அடுத்த படியாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# நிதி முகாமைத்துவக் கலந்துரையாடல்

**(ஜெகதீஸ்வரன் பிரஷாந்த் )**

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையில் சர்வோதயம் ஊடாக நிதி முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று (02) மல்லாவி பகுதியில் இடம்பெற்றது.

பொருளாதாரப் பிரச்சினை என்பது கொரோனா காலப் பகுதியில் மிக மோசமாக எம் மக்களை தாக்கியிருந்தது.

இனியொரு சந்தர்ப்பங்களில் அவ்வாறான பொருளாதார பிரச்சினை மோசமடையும்போது பொருளாதார தாக்கத்தில் இருந்து எவ்வாறு மக்கள் மீளெழ வேண்டும் என்றும், அந்த சந்தர்ப்பங்களில் நிதி முகாமைத்துவத்தை எவ்வாறு பாதுகாப்பது என்றும் இதன் போது தெளிவுறுத்தப்பட்டது.

நிகழ்வில் பொருளாதார பிரச்சினை எழுந்துள்ள இந்தக் காலப் பகுதியில் பொது மக்கள் எவ்வாறு கிடைக்கும் பணத்தைச் சிக்கனமாகக் கையாள்வது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.




நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் சாந்தமேனன், மற்றும் சுகாதார கல்வி அதிகாரி ஜெயபாலன் ஆகியோர் வளவாளராக கலந்து கொண்டனர்.

கல்விளான், துணுக்காய் மற்றும் மல்லாவி, ஐயங்கன்குளம் பகுதியை சேர்ந்த சுமார் 60 இற்கும்மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர் .

# வாசிப்பு மாதத்தில் இரவல் வழங்கல்!







**(த.சுபேசன்)**

சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு உட்பட்ட ஆறு பொது நூலகங்களும், மாணவர்கள் மற்றும் வாசகர்கள் பயன்பெறும் வகையில் தமக்கு இடையிலான உள்ளக இரவல் வழங்கும் சேவையை தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஆரம்பித்துள்ளன.

இதன் மூலம் சவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட அனைவரும் ஆறு பொது நூலகங்களையும் உள்ளடக்கியதான பயனை பெறக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VAN RENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882




# சம்பள உயர்வைவிட அத்தியவசியப் பொருள்களின் விலை குறைப்பே காலத்தின் தேவை...!

■ அபு அலா.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கக் கோரிய போராட்டம் தற்போது நாடளாவிய ரீதியில் சூடுபிடித்து எல்லா இடங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் போராட்டங்களில், வைத்திய சங்கம் தொடக்கம் நாட்டிலுள்ள சகல அரச ஊழியர்கள் சங்கங்களும் போராட்டக் களத்தில் இறங்கி ஈடுபட்டு வருவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அரச ஊழியர்களுக்கு 20 ஆயிரம் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும், மேலதிக நேரங்களையும் அதற்கான கொடுப்பனவுகளையும் வழங்க வேண்டும், சீருடைக்கு வழங்கப்படும் கொடுப்பனவையும் அதிகரிக்க வேண்டும் என்று பல்வேறுபட்ட கோரிக்கைளை முன்வைத்து இந்தச் சங்கங்கள் இப்போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

இது அவர்களின் கணிப்பீட்டின்படி சரியாக இருந்தாலும், இதில் மிக அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் பாமர மக்களும், அன்றாடம் கூலித்தொழில் செய்பவர்களும், நடுத்தர வர்க்கத்தினருமாவர். ஆனால், இந்தப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் உறவினர்களும் இதில் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள்.

சம்பள அதிகரிப்பைக் கோரி நிற்கும் அரச ஊழியர்கள், அவர்களின் தனிப்பட்ட விடயங்களை மாத்திரமே முன்வைத்து இந்தப் போராட்டக் களத்தில் ஈடுபட்டுள்ளனர். இது அவர்களின் சுயநலமா? அல்லது பொதுநலமா? என்பது ஒரு பக்கம் இருக்க, நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் நன்மை கிடைக்கக் கூடிய போராட்டமாக இது அமைந்திருந்தால் அவர்களின் போராட்டத்தை வரவேற்றிருக்கலாம்.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றுக்குப் பின்னர் எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சிக்கித் தவித்த விடயம் யாவரும் அறிந்த உண்மையாகும். இதில் பாதிக்கப்பட்டவர்கள் அரச ஊழியர்கள் மாத்திரமல்ல, நாட்டிலுள்ள எல்லா மக்களுமேயாவர். அன்று ஆரம்பித்த பிரச்சினை இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அதன் தாக்கங்களில் இருந்து சாதாரண மக்கள் இன்னும் மீளவில்லை என்று தான் சொல்லாம்.

அத்தியவசியப் பொருள்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருள்களின் விலையேற்றங்களும் சுமார் 225 சதவீதத்துக்குமேலாகஉயர்வடைந்துள்ளது.

இந்த விலையேற்றங்கள் அத்துடன் நின்றுவிடாமல், நாளுக்கு நாள் அதிகரித்தும் வருகின்றன. உதாரணமாக 400 கிராம் 390 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த பால்மாவின் விலை, தற்போது ஆயிரத்து 100 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. அதேபோன்று ஒரு கிலோ சீனி 95 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது அதன் விலை 295 ரூபாவாக விலை உயர்வடைந்துள்ளது. இவ்வாறே ஏனைய பொருள்களின் விலையேற்றங்களும் உள்ளன.

இதன்படி, அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமாக இருந்தால், ஒரு அரச ஊழியன் மாதாந்தம் பெற்றுக் கொள்ளும் அடிப்படை ஊதியத்திலிருந்து சுமார் 225 சதவீதத்தை அரச் அதிகரித்து வழங்க வேண்டும். அப்படியாக இருந்தால், 30 ஆயிரம் பெறுகின்ற ஒருவருக்கு 67500 ரூபாவை அதிகரித்து வழங்க வேண்டும். இது அவ்வாறில்லாமல், இன்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்கள், ஒரு கண்மூடித்தனமாக 20 ஆயிரத்தை தங்களுக்கு அதிகரித்து வழங்கக் கோரி நிற்கின்றனர்.

இதில் ஒன்று மட்டும் மிகத் தெளிவாக விளங்குகின்றது. தாங்கள் மட்டும் வாழ்ந்தால் போதும் ஏனையவர்கள் எக்கேடு கெட்டுப்போனால் எங்களுக்கென்ன என்பதைப் போன்றே அவர்களின் செயற்பாடுகள் உள்ளன.

அரச ஊழியர்கள் இன்று கேட்டு நிற்கும் 20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வை, பொருள்களின் விலையேற்றங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இத்தொகையை அரசு வழங்கிவிட்டுச் செல்வது அரசுக்கு பெரிய விடயமாக இருக்காது.

ஏனெனில், பொருள்களின் விலையேற்றத்துக்குத் தகுந்தால் போல் எங்களது ஊதியத்தை அதிகரித்து வழங்க வேண்டும் என்று கோரிப் போராட்டங்களை நடத்தினால்தான் அரசுக்கு பாரிய தலையிடியாக இது மாறியிருக்கும்.

இது அவ்வாறில்லாமல், நாட்டிலுள்ள அரச ஊழியர்கள் தங்களுக்கு 20 ஆயிரத்தை அதிகரித்து வழங்க வேண்டும் என்ற போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இப்போராட்டம் அரசுக்கு பாரிய தலையிடியாக இருக்காது என்பது வெளிச்சம்.ஷ

இது அவ்வாறிருக்க, அரச ஊழியர்களின் போராட்டத்தின்படி 20 ஆயிரத்தையோ அல்லது 10 ஆயிரத்தையோ அரசு வழங்க முன்வந்துள்ளது என்று வைத்துக்கொள்வோம். அவ்வாறு அதை பெற்றுக் கொண்ட அரச ஊழியர்கள் தங்களின் வாழ்வாதார நிலையை ஓரளவு சீர்செய்து செல்கையில், மீண்டும் பொருள்களின் விலைகளை அரசு அதிகரிக்கச் செய்தால், மீண்டும் போராட்டத்தில் ஈடுபடுவதா? அல்லது வாய் மூடி மௌனியாக இருப்பதா? இவ்வாறு செய்வதால் யாருக்கு இலாபம்? என்பதுதான் இங்கு கேள்வியாக இருக்கின்றது.

இன்று அரச ஊழியர்கள் முன்னெடுத்துள்ள போராட்டங்களால் அரசுக்கு ஒருபோதும் நஷ்டமே இல்லை. அதில் இலாபம் மட்டுமே உள்ளது என்பதைப் போராட்டக்காரர்கள் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அரச ஊழியர்கள் தற்போது எடுத்துள்ள போராட்டங்கள் மூலம் அவர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் நன்மை பயக்கும் விடயம் மறைமுகமாக இருந்தாலும், இது ஒரு தலைப்பட்ச விடயமாகவே இப்போராட்டம் இருக்கின்றது.

அவர்களின் போராட்டம் அனைத்து மக்களதும் வாழ்வாதாரங்களைக் கவனத்தில் கொண்டே அமைந்திருக்க வேண்டும். அதற்காக, அரச ஊழியர்கள் தொடக்கம் கூலித் தொழிலாளிகள்வரை இணைத்துக் கொண்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு இருக்க வேண்டும்.

அத்தியவசியப் பொருள்கள் உள்ளிட்ட ஏனைய பொருள்களின் விலைகளைக் குறைத்திட, நாளுக்கு நாள்

(16ஆம் பக்கம் பார்க்க)

# சம்பள உயர்வைவிட...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களுக்கு விலையேற்றும் செயற்பாட்டை நிறுத்திடு என்ற பல் வேறுபட்ட அத்தியவசியத் தேவைகளை முன்வைத்த கோசங்களை அரசுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் இந்தப் போராட்டம் அமைந்திருந்தால் நாட்டிலுள்ள அனைத்து மக்களதும் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு கிடைத்திருக்கும்.

இது அவ்வாறில்லாமல், தங்களின் சுயநலத்தை மட்டுமே கவனத்தில் கொண்டு ஈடுபடும் அரச ஊழியர்களின் செயற்பாட்டை எந்த மக்களாலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருள்களின் விலையேற்றத்தைக் குறைப்பதற்கும், எல்லா மக்களுக்கும் நன்மை கிடைக்கக் கூடிய வகையிலும் அரசு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். அன்றாட கூலித் தொழிலை நம்பி வாழும் - பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் ஏழை மக்கள் விட யத்திலும் அரசு கவனம் செலுத்த வேண்டும்.




# ‘மலையகம் 200’ கண்காட்சி

(அஸ்ஹர் ஆதம்)

‘மலையகம் 200’ எனும் தொனிப் பொருளில் கல்முனை கிறிஸ்டா இல்லத்தில் இடம் பெற்று வரும் கண்காட்சியை பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டு வருகின்றனர்.

இரண்டாம் நாளான இன்று தமிழ், முஸ்லிம் பாடசாலை மாணவ, மாணவிகள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு கண்காட்சியைப்பார்வையிட்டனர்.



# நிந்தவூர் பிரதேச செயலகத்துக்கு புதிய மேலதிக மாவட்டப் பதிவாளர்

(எம். எப். நவாஸ்)

நிந்தவூர் பிரதேச செயலகத்தின் புதிய மேலதிக மாவட்டப் பதிவாளராக கல்முனை காணிப் பதிவகத்தில் மாவட்டப் பதிவாளராக கடமை புரிந்த அட்டாளைச்சேனையைப் பிறப்பிடமாகவும், நிந்தவூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஜே. முகம்மட் பைறுஸ் பதவியேற்றுக் கொண்டார்.

இந்தப் பதவியேற்பு வைபவத்தில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எம். அப்துல் லத்தீப் , மற்றும் உதவி பிரதேச செயலர், செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

புதிய மேலதிக மாவட்டப் பதிவாளர் பதவியேற்பு நிகழ்வின்போது கல்முனை காணிப் பதிவகத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் வருகை தந்தனர்.






# நாட்டில் பெண்களின் கல்வி நிலையில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு



நமது நாட்டில் கல்வி பற்றி பேசும் போது பெண்களின் கல்விக்கு விசேட கவனம் செலுத்த வேண்டும். பெண்களின் கல்விக்கு பக்க பலத்தை அளிப்பது பொருளாதாரத்தை வலுப்படுத்தும். உற்பத்தித் திறனை அதிகரிக்கும். பணியிடத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும். அதனூடாக பெண்களுக்கான உரிமைகள், சமூக உரிமைகள், பொருளாதார உரிமைகள் என்பன பெண்களிடம் வலுப்பெறும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நுகேகொடை புனித ஜோசப் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கேடட் வாத்தியக் குழுவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்–

மக்கள் தொகையில் 52 சதவீதமாக இருக்கும் பெண் தலைமுறையை நாம் மறந்துவிடக் கூடாது. பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் முறை நமது நாட்டில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதுதான் பிரச்சினைக்குரிய விடயம். இங்கு பெண் பிள்ளைகளின் கல்விக்கு விசேட செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். அறிவை மையமாக கொண்ட பொருளாதாரம் குறித்து பேசினாலும் அது பிரயோக ரீதியாக யதார்த்தமான ஒன்றாக இருக்க வேண்டும்.


நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு வரும் வேளையில் நமது நாட்டில் காலாவதியான கல்வி முறை நவீனமயமாக்கப்பட வேண்டும். மனப்பாட கல்வியைத் தவிர்த்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் கல்வி முறை உருவாக்கப்பட வேண்டும். ஆங்கில மொழி, தகவல் தொழிநுட்ப கல்வியை முதலாம் தரத்தில் இருந்தே புகட்ட வேண்டும். இந்தப் பாடங்கள் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

புதிய அபிவிருத்தி எண்ணக்கருக்கள் மூலம் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும், புதிய பாடத்திட்டத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். கல்விக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து எவ்வளவு பணம் ஒதுக்கினாலும் புதிய வேலைத்திட்டம் ஏதும் இல்லை என்றால் அந்த பணம் பலனளிக்காது.–என்றார்.



# பாலஸ்தீன பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்!

## - இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்தல்



பயங்கரவாதத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது, அதே நேரத்தில் பாலஸ்தீனர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதும் முக்கியம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 7 ஆம் திகதி இஸ்ரேலின் தெற்கு பகுதியை குறிவைத்து ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தினர். தொடர்ந்து இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்துக்கு இடையிலான எல்லை ஓரத்தில் அமைந்துள்ள இஸ்ரேல் நாட்டின் பகுதியில் இருந்து பலரைபணயக் கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் சிறை பிடித்து சென்றனர். அதையடுத்து காசா மீது தாக்குதலை இஸ்ரேல் தொடுத்தது.

இதில் 1,400 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இதற்கு பதிலடியாக ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் இராணுவம் போர் தொடுத்து வருகிறது.

இதையடுத்து, இஸ்ரேல் இராணுவ தாக்குதல்களில் இதுவரை 9 ஆயிரத்து 61 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 3 ஆயிரத்து 760 பேர் குழந்தைகள், 2 ஆயிரத்து 326 பேர் பெண்கள். இதுவரை சுமார் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என பாலஸ்தீன சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

அத்தோடு, இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடினமான இந்த நேரத்தில் இந்தியா இஸ்ரேலுக்கு ஆதரவாக உள்ளது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இத்தாலியில் வெளிவிவகார துறைக்கான செனட் உறுப்பினர்களிடையே பேசிய இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் இடம்பெற்றது பயங்கரவாத தாக்குதல். அதற்குப் பின்னர் இடம்பெற்ற செயல்கள் அனைத்தும் அந்தப் பகுதியையே வேறு திசைக்குக் கொண்டு சென்றுள்ளது. பயங்கரவாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாதது, அதே நேரத்தில் பாலஸ்தீனர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதும் முக்கியம்.

தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண பேச்சுவார்த்தை முக்கியமானதாகும். ஒருபோதும் மோதல் மற்றும் பயங்கரவாதத்தின் மூலம் தீர்வு காண முடியாது. தற்போதைய சூழ்நிலையில் மனிதாபிமான சட்டம் மதிக்கப்பட வேண்டும். ஹமாஸின் தாக்குதலை கண்டித்து,

இஸ்ரேலுக்கு முழு ஆதரவை தெரிவித்த முதல் உலக தலைவர்களில் பிரதமர் நரேந்திர மோடியும் ஒருவர். அங்கு மீண்டும் ஸ்திரத்தன்மை ஏற்படவேண்டும். அப்பகுதியில் தொடர்ந்து மோதல் நீடிக்கக் கூடாது என்று தெரிவித்துள்ளார்.

# நடிகர் ஜூனியர் பாலையா காலமானார்!



பிரபல நடிகர் ஜூனியர் பாலையா உடல்நலக் குறைவால் சென்னையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 70. அவரது உடலுக்கு திரையுலகினர், ரசிகர்கள் அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த பழம்பெரும் நடிகர் டி.எஸ். பாலையாவின் 3 ஆவது மகன் ஜூனியர் பாலையா. இவர், ரகு பாலையா என்ற தனது பெயரை சினிமாவுக்காக ஜூனியர் பாலையா என்று மாற்றிக்கொண்டார்.

கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக, திரைப்படங்களில் நடித்து வந்தார். கரகாட்டக்காரன், கோபுர வாசலிலே, சுந்தரகாண்டம், சின்னத்தாயி, சங்கமம், வின்னர், சாட்டை,நேர்கொண்ட பார்வை உள்ளிட்ட ஏராளமான படங்களில் நடித்துள்ளார். தொலைக்காட்சி தொடர்களிலும் நடித்துள்ளார்.

சென்னை வளசரவாக்கத்தில் வசித்து வந்த ஜூனியர் பாலையா, உடல்நிலை சரியில்லாததால் கடந்த சில நாட்களாக சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், நேற்று காலை மூச்சுத் திணறல் காரணமாக காலமானார்.

ஜூனியர் பாலையாவின் உடலுக்கு திரையுலகினர், நண்பர்கள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர். இறுதிச் சடங்கு இன்று மாலை நடைபெறுகின்றது.

ஜூனியர் பாலையா மறைவுக்கு பல்வேறு தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

280 இற்கும் மேற்பட்ட திரைப்படங்கள், தொலைக்காட்சி தொடர்களில் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர வேடங்களில் நடித்துமக்களின் பாராட்டையும், பேரன்பையும் பெற்றவர் ஜூனியர் பாலையா என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அவரை இழந்து வாடும்குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜூனியர் பாலையா ரகு, எனக்கு பதின்பருவ நண்பராக அமைந்தார் என்று நடிகர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

தந்தை போலவே நாடக மேடைகளில் தன் கலையை தொடங்கி திரையில் வலம் வந்தவர் மறைந்துவிட்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளனர்.

# காசாவை சூழ்ந்த இஸ்ரேல் இராணுவத்தை பைகளில் திருப்பி அனுப்புவோம்!

## - ஹமாஸ் எச்சரிக்கை

காசாவை சூழ்ந்த இஸ்ரேல் இராணுவத்தினரை பைகளில் திருப்பி அனுப்புவோம் என ஹமாஸின் இராணுவப் பிரிவான இஸ் அட்-டின் அல்-காசம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

காசா மீதான தரைவழி தாக்கு தலை இஸ்ரேல் இராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது. இதனால் போர் தீவிரமடையும் அபாயம் அதிகரித்துள்ளது.

வடக்கு காசாவில் உள்ள பலஸ்தீனியர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் பலமுறை எச்சரிக்கைவிடுத்த போதிலும், ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறவில்லை.

அதோடு, போர் நிறுத்தம் என்பது இஸ்ரேல், ஹமாஸிடம் சரணடைவதற்கு சமமானது. ஹமாஸுக்கு எதிரான போரில் வெற்றிபெறும் வரை இஸ்ரேல் போராடும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியிருந்தார்.

இது தொடர்பாக இஸ்ரேல் இராணுவத்தின் செய்தி தொடர்பாளர் டேனியல் ஹகாரி கருத்து தெரிவிக்கையில், இஸ்ரேல் இராணுவ வீரர்கள் காசா பகுதியை சுற்றிவளைத்து விட்டனர். இனி போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடம் கிடையாது என்றும் குறிப்பிட்டார்.

இதனிடையே காசாவில் உள்ள அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித்



தாக்குதலில் பாலஸ்தீனர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என ஹமாஸ் அமைப்பு குற்றம்சாட்டியிருந்தது.

இந்த நிலையில், காசாவை சூழ்ந்த இஸ்ரேல் இராணுவ வீரர்களை 'பைகளில் திருப்பி அனுப்புவோம்' என ஹமாஸின் இராணுவப் பிரிவான இஸ் அட்-டின் அல்-காசம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, காசா போரை சில நாட்களுக்கு நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கேட்டுக் கொண்டுள்ளார். அது சர்வதேச அளவில் கவனம் பெற்றுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்க வெளிவிகார அமைச்சர் அண்டனி பிளிங்கன் கருத்து தெரிவிக்கையில், ஹமாஸ் பெண்களையும், குழந்தைகளையும் கேடயமாகப் பயன்படுத்துகிறது. தற்போது நடைபெற்று வரும் மோதலில், தன்னை தற்காத்துக் கொள்ள இஸ்ரேலுக்கு முழு உரிமையும் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் பொதுமக்களை பாதுகாக்கும் பொறுப்பும் இஸ்ரேலுக்கு இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது தாக்குதல்!



லெபனானில் இருந்து இஸ்ரேல் இஸ்ரேலின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள கிரியாத் ஷ்மோனா நகரின் மீது ஏவுகணை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஹமாஸ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஒரே நேரத்தில் சுமார் 12 ஏவுகணைகளை ஹமாஸ் ஏவியுள்ளது. இந்த தாக்குதலில் இஸ்ரேலை சேர்ந்த இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடர்கிறது. முதலில் வான்வழியாக மேற்கொண்ட இந்த தாக்குதல் தற்பொழுது தரைவழியாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பல்வேறு அமைப்புகள் மற்றும் உலக நாடுகள் காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் நிறுத்த வேண்டுமென வலியுறுத்தி வருகின்றன. ஆனால், தாக்குதலை நிறுத்த முடியாது என இஸ்ரேல் தெரிவித்தது.

இந்த சூழலில் லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்தியுள்ளது. பாலஸ்தீனத்தின் காசா நகரை தலைமையிடமாக கொண்டு ஹமாஸ் இயங்கி வருகிறது. லெபனானின் ஆதரவு ஹமாஸ் அமைப்புக்கு உள்ளது. இத்தகைய சூழலில் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

காசா வாழ் மக்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் படுகொலை தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் லெபனானில் இருந்து கிரியாத் ஷ்மோனா நகரை ஏவுகணை மூலம் தாக்கியதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

லெபனானில் இயங்கி வரும் ஹிஸ்புல்லாவும் இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டு வருகிறது. இதற்கு இஸ்ரேல் பதிலடி கொடுத்து வருகிறது.

இதேவேளை, காசா நகரில் சுமார் 20 ஆயிரம் பேர் அடைக்கலம் புகுந்துள்ள 4 பள்ளிகள் மீது இஸ்ரேல் தாக்குதல் மேற்கொண்டுள்ளது என ஐ.நா தெரிவித்துள்ளது. இதில் சுமார் 20 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்து உள்ளனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது.